## தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபை – 2017

தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபையின் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(6) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் கருத்துரைகளும் மீளாய்வாண்டின் சபையின் செயற்படுநிலை தொடர்பான எனது அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன இந்த அறிக்கைத் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் இருப்பு

சபையினால் இறுதியாகத் தயாரிக்கப்பட்ட 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | **2016** | **2015** |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 6,285,763,738 | 5,980,906,735 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 786,880,486 | 619,824,684 |
| மொத்த சொத்துக்கள் | 7,072,644,224 | 6,600,731,419 |
| **உரித்துக்கள்** | 1,137,450,817 | 1.116,964,929 |
| நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | 3,810,940,996 | 4,010,224,408 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 2.124,252,410 | 1,473,542,083 |
| **மொத்த உரித்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்** | 7,072,644,223 | 6,600,731,420 |

| | | |
|---|---|---|
| வருமானம் | 3,051,546,983 | 2.307,597,003 |
| செலவினம் | 3,042,059,852 | 2,272,756,898 |
| | -------------------- | -------------------- |
| **மிகை** | 9,487,131 | 34,840,105 |
| | ========= | ========= |

**2.2.1 சபையின் தொடர்ந்திருத்தல்**

நிதி அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்ட ஆண்டறிக்கையின் பிரகாரம் தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபையின் மூலம் மீள் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் பொதுத் திறைசேரிக்கு அத்திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கடன்தொகை ரூபா 5,226,174,301 ஆகும். மேலும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 16(2) ஆம் பந்தியின் பிரகாரம் பொது முயற்சிகள் திணைக்களத்தின் மூலம் 2017 ஆம் ஆண்டின் போது கடன் பெற்றுக்கொள்ளும் எல்லை ரூபா 75 மில்லியன் முதல் ரூபா 300 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 210,333,333 கடன் பணம் அரசாங்க வங்கிக்குச் செலுத்த வேண்டியதாகக் காணப்பட்டது. 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் சுட்டிக் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் மிகக் கஷ்ட நிலை மற்றும் திரவத் தன்மை பிரச்சினைகள் காணப்பட்டமையின் காரணமாக சபையின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பாக பிரச்சினைகள் ஏற்படும் ஆபத்தொன்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் சொத்துக்களின் செயலாற்றலை மேலே கட்டியெழுப்பாமல் சபையின் கடன் அளவு 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 600 மில்லியன் வரை மேலே அதிகரிப்பதற்கு கோரப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கீழே குறிப்பிடப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
|---|---|
| 2009 இன் 9 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அதிகாரச்சட்டத்தின் 3.2 உப பிரிவு | கணிப்பீட்டு வழுவின் காரணமாக மீளாய்வாண்டிற்கான தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரிப் பெறுமதி ரூபா 75,258 தொகை குறைவாக அனுப்பப்பட்டிருந்தது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

**3.1.1 திட்டமிடல்**

**(அ) கூட்டிணைந்த திட்டம்**

(i) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு ஆரம்பமாவதற்கு 15 தினங்களுக்கு முன் நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரதி உரிய தரப்பினருக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(ii) பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம், கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய தற்போது நிறுவனத்திற்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற வளங்கள், நிறுவனக் கட்டமைப்பு, திட்டமிடப்பட்ட கால எல்லையில் நிறைவேற்ற வேண்டிய இலக்குகள் மற்றும் நோக்கங்கள் தொடர்பாக முகாமைத்துவ பொறுப்புக்கள் மற்றும் சபையின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற டிலய்ட், பல்தேசிய விற்பனை கடைகள், பால் செயற்திட்டம் போன்ற பிரதான அலுவலக விற்பனைக் கடை போன்ற செயற்திட்டங்கள் தொடர்பான தகவல்கள் 2016 - 2020 இன் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

(i) மீளாய்வாண்டின் பாதீடு மற்றும் பெறுகைத் திட்டத்தின் தகவல் தொழில்நுட்ப பிரிவிற்காக ரூபா 13 மில்லியன் முதலீடொன்று ஒதுக்கப்பட்டிருந்த போதும், அதன் மூலம் எதிர்பார்த்த பணிகள் 2017 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இனங்காணப்படவில்லை.

(ii) கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு 2017 ஆம் ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பித்த செயலாற்றல் அறிக்கையில் தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபையின் கீழ் 2017 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட 16 செயற்திட்டங்களுக்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட முதலீட்டு பெறுமதியான ரூபா 106.20 மில்லியனில் ரூபா 72.6 மில்லியன் செலவிடப்பட்டதாக செய்யப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அவ்வாறான செயற்திட்டமொன்று எதிர்வு கூறப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டிற்காக சபையினால் 31 பண்ணைகளுக்காக கால்நடை வளங்களின் பௌதீக செயல்முன்னேற்றத்தைக் காண்பித்து செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும், பண்ணையின் பிரதான பயிரான தென்னை மற்றும் ஏனைய பயிர்ச் செய்கை மற்றும் நிர்மாணம் என்பவற்றின் செயல்முன்னேற்றமும், பிரதான அலுவலகம் மற்றும் சபையின் காணப்படுகின்ற செயற்திட்டங்களையும் உள்ளடக்கிய ஒட்டுமொத்த நிறுவனத்திற்கும் உரியதாகத் தயாரிக்கப்பட்ட பௌதீக மற்றும் நிதிசார் செயல்முன்னேற்றத்தைக் காண்பிக்கின்ற செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.1.2 செயற்படு நிலையும் மீளாய்வும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டிற்குரியதாக சபையினால் தயாரிக்கப்பட்டு 2017 யூலை 12 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தையும் செயலாற்றல் அறிக்கையையும் ஒப்பீடு செய்த போது 31 பண்ணைகளின் கீழான 10 செயற்திட்டங்களுக்குரிய 294 செயற்பாடுகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 21 பண்ணைகளில் 07 செயற்திட்டங்களுக்குரிய 40 செயற்பாடுகள் 2017 ஆம் ஆண்டில் முழுமையாக அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் அமுல்படுத்தப்படாமைக்கான காரணங்களும் செயலாற்றல் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) சபையின் வருடாந்த செயல்முன்னேற்றம் தொடர்பான பரீட்சிப்பின் போது செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 23 பண்ணைகளுக்கும், 09 செயற்திட்டங்களுக்கும் உரிய 63 செயற்பாடுகளின் செயல்முன்னேற்றம் ஒரு சதவீதத்திற்கும் 49 சதவீதத்திற்கும் இடையிலான பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் உரிய பணிகளை சரியான முறையில் நிறைவேற்றாமைக்கான காரணங்களும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 14 பண்ணைகளில் 05 செயற்திட்டங்களுக்குரிய 14 செயற்பாடுகள் 2017 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டிருந்த போதும், அந்த செயற்பாடுகள் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1972 இன் 11 ஆம் இலக்க அரசாங்க விவசாய கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் 2 ஆவது பிரிவு மற்றும் 1975 பெப்ரவரி 14 ஆந் திகதிய 151 ஆம் இலக்க வர்த்தமானியின் திருத்தத்தின் பிரகாரம் சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளில் உள்ளடக்கப்பட்ட இறைச்சியுடனான உயிரினங்களைக் கொள்வனவு செய்வதற்காக நிலையத்தைத் தாபித்தல் மற்றும் உயிரினங்களின் அடையாளங்களை வழங்கும் வகையில் பிரதேச அறுவைக் கூடங்களை தாபித்தல், போக்குவரத்துச் செய்தல் மற்றும் இனங்காணும் வகையில் முத்திரையிடப்பட்ட அடையாளம் அறுவைக் கூடங்களிலிருந்து அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கு போக்குவரத்துச் செய்தல் போன்ற பணிகள் சபையினால் தற்போது நிறைவேற்றப்படுவதில்லை.

### 3.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 பெப்ரவரி 11 ஆந் திகதிய அமப/16/0125/732/004 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை இராணுவத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற கந்தகடுவ மற்றும் திருகோணமடு பண்ணைகளை மீண்டும் சபைக்கு கையேற்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 யூலை 08 ஆந் திகதிய அமப/15/0940/631/018-1 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் மகாவலி கால்நடை வியாபாரக் கம்பனி 2018 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரையும் சபையின் கீழ் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி அறிக்கை, பெறுமதி சேர்வரி அறிக்கை மற்றும் பொருளாதார மற்றும் சேவைக் கட்டண அறிக்கைகளில் பொருளாதார மற்றும் சேவைக் கட்டண அறிக்கைகளில் காண்பிக்கப்பட்ட ஆண்டின் மொத்த விற்பனைப் புரள்வு முறையே ரூபா 2,480,149,815, ரூபா 2,400,170,372 மற்றும் ரூபா 2,486,787,349 தொகைகளாக ஒன்றுக்கொன்று வேறுபட்ட பெறுமதியில் காண்பிக்கப்பட்ட போதிலும், அதற்கான இணக்க அறிக்கை கணக்காய்விற்குச் சமரப்பிக்கப்படவில்லை.

(ஈ) கந்தளாய் கரும்பு பயிர்ச் செய்கை நிலத்தில் 1,000 ஏக்கர் காணியை சோளச் செயற்திட்டத்திற்காக கிழக்கு உதயத்தின் கீழ் சுழற்சி நிதியமொன்றை ஏற்படுவதற்கு 2007 யூன் 28 ஆந் திகதி சபைக்கு ரூபா 37.55 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டம் வெற்றியளிக்காமையின் காரணமாக 2011 செப்தெம்பர் 11 ஆந் திகதி காணியை சீனிக் கம்பனிக்கு கையளித்த சந்தர்ப்பத்தில் சோளச் செயற்திட்டத்தின் கீழ் காணப்பட்ட சுழற்சி நிதியத்தில் சேமிக்கப்பட்ட

தொகையான ரூபா 17,549,342 தொகை மத்திய வங்கியின் கருத்துரைகள் மற்றும் 2007 யூன் 20 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் பொதுத்திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்யாமல் அதில் ரூபா 13,295,637 தொகை 2011 ஆம் ஆண்டு முதல் நிலையான வைப்பின் கீழ் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) ரூபா 11,555,012 பெறுமதியான கொள்வனவுகள் மற்றும் 04 நிர்மாணச் சந்தர்ப்பங்களுக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 1.6 ஆம் தரப்படுத்தலின் பிரகாரம் சபை B தரத்தின் நிறுவனமொன்றாக இருந்ததுடன் சுற்றறிக்கையின் 5.2.2(அ) இன் பிரகாரம் B தரத்தின் நிறுவனமொன்றின் மூலதன முதலீடு ரூபா 2.5 மில்லியனை விட கூடுதலாக மேற்கொள்ளப்படும் செயற்திட்டத்திற்காக சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 5.2 மில்லியன் முதல் ரூபா 23.63 மில்லியன் வரையான 16 செயற்திட்டங்கள் அவ்வாறு சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளாமல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

### 3.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2017 திசெம்பர் 31 இல் உரிய கட்டிடம் தொடர்பான அறிக்கையின் பிரகாரம் பண்ணைகளில் அமைந்துள்ள 81 ஊழியர்களின் உத்தியோகபூர்வ விடுதிகளில் ஊழியர்கள் குடியிருக்காமல் பயனற்று காணப்படுகின்றமையும், பயன்பாட்டிற்கு எடுக்காதுள்ள வீடற்ற கட்டிடங்களின் நிலத்தின் அளவு 126,341 சதுர மீற்றராக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டிற்காக சபையினால் விற்பனைத் திட்டம் தயாரிக்கப்படாதிருந்ததுடன், 2017 ஆம் ஆண்டின் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்த ரூபா 4,880,715 பெறுமதியான (உயர் வாயு வெப்பம்) (UHT) 239,000 அலகு உறையிடல் பொருட்கள் 2017 ஆகஸ்ட் 09 ஆந் திகதி இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. 2018 ஆகஸ்ட் 14 ஆந் திகதி வரையிலும், இந்த உறையிடல் பொருட்களைப் பயன்படுத்தி ரூபா 302,523 பெறுமதியான 14,814 அலகுகள் அதாவது 6.1 சதவீதம் மாத்திரமேயான உற்பத்திகளே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் சபையின் திட்டமிடல் நலிவுகளின் அடிப்படையில் வளங்கள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையின் துணைக் கம்பனியான வ/ப இலங்கை கோழிக் கட்டுப்பாட்டு அபிவிருத்தி தனியார் கம்பனியின் கோழிக்குஞ்சு உற்பத்திக் கூட இயந்திரத்தின், இயலளவு 19,600 அலகுகளாக இருந்த போதிலும், தற்போது உற்பத்தி அலகு 10,000 அளவாக இருந்ததுடன், அந்த இயந்திரத்தின் முழுமையான இயலளவில் பயன்படுத்தக் கூடிய வகையில் நவீனமயப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், சபைக்கு கையளிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ள தமுத்தேகமயில் அமைந்துள்ள மகாவலி கால்நடை உற்பத்திக் கம்பனியும் பிரதான உற்பத்திக் கோழிக் குஞ்சுகளாக இருந்த போதிலும், சபையினால் எந்தவொரு சாத்தியவள ஆய்வம் மேற்கொள்ளாமல் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான காணியில் கோழிப் பண்ணைக்காக வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கு 2017 ஆகஸ்ட் 28 ஆந் திகதி ரூபா 8,938,260 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தமை பிரச்சினைக்குரியதாக இருந்தது. 2017 இன்

கூட்டிணைந்த திட்டம், செயல்நடவடிக்கைத் திட்டம் அல்லது மூலதன பாதீட்டில் சபையினால் கோழிப் பண்ணையொன்றை ஆரம்பிப்பதற்காக எதிர்கால நோக்கு காணப்பட்டதுடன் வாடகை செலுத்தி பெறப்பட்ட இந்தக் காணி மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு உரித்தற்றதாகவும், அப்பிரதேச பொறுப்புச் சபையின் உதவி பொது முகாமையாளரின் கடிதத்தின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் நிறுவனத்தில் இவ்வாறான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளுதல் கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது பன்ற மற்றும் செம்மறியாடு என்பவற்றை இறக்குமதி செய்யும் செயற்திட்டத்திற்காக செய்திப்பத்திரிகை அறிவித்தல்களுக்காக ரூபா 115,870 செலவில் கேள்வி கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்டம் கைவிடப்பட்டமையின் காரணமாக, செய்திப் பத்திரிகை அறிவித்தல்களுக்காக ஏற்பட்ட செலவினம் பயனற்ற செலவினத்திற்குள்ளாகியிருந்தது.

### 3.6 பதவியிணியினர் நிர்வாகம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 5.2.1 இன் பிரகாரம் பதவி நிலைத் தரத்தின் பதவியொன்றில் வெற்றிடம் ஏற்படுமிடத்து அந்த பதவியை தாமதமின்றி நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும், சபையின் நிறுவனக் கட்டமைப்பில் உயர் பதவிநிலைத் தரத்தின் பதவிகளாக அதாவது பொது முகாமையாளர், 02 பிரதி பொது முகாமையாளர் மற்றும் 02 உதவி பொது முகாமையாளர்கள் என 05 பதவிகள் 11 மாதங்கள் முதல் 02 வருடங்களும் 08 மாதங்களும் வரையிலான கால வீச்சில் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் மேலும் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) பொது முகாமையாளர் பதவி

தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 9:1 இன் பிரகாரம் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவரை மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கு அமைச்சரவையின் முன் அங்கீகாரம் பெறுதல் கட்டாயமாக இருந்ததுடன் 2003 யூன் 02 ஆந் திகதி பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.10 ஆம் பந்தியின் பிரகாரம், ஒப்பந்த அடிப்படையில் அல்லது அமைய அடிப்படையில் எந்தவொரு ஆட்சேர்த்தல்களுக்காகவும் கொடுப்பனவு செய்வதற்காகவும் பொதுத் திறைசேரியின் செயலாளரின் முன் அனுமதி பெறல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. எனினும் அதிகாரசபையினால் அதற்கு இணங்காத வகையில் 2018 சனவரி 16 ஆந் திகதி முதல் முன்னாள் பொது முகாமையாளர் சபையின் பொது முகாமையாளர் பதவியில் பதில் கடமையில் நியமிக்கப்பட்டிருந்ததுடன், பதில் கடமைப் படியாக மாதாந்தம் ரூபா 110,000 தொகையும், தொழில்சார் படியாக ரூபா 15,000 தொகையும் மற்றும் காப்புறுதி படியாக மாதாந்தம் ரூபா 2,000 தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 127,000 தொகையுடன் முன்னர் வழங்கப்பட்ட சலுகையுடனான வாகனமொன்று (தனிப்பட்ட பாவனைக்கு 960 கிலோமீற்றருக்கு எரிபொருள்) வீடு மற்றும் இரண்டு ஊழியர்களும் வழங்கப்பட்டிருந்தன. எனினும், பொது முகாமையாளரின் ஒப்பந்த காலம் 2019 சனவரி மாதம் 15 ஆந் திகதியில் முடிவடைவதாக இருந்த போதிலும், இந்த பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு எந்த நடவடிக்கையும் இவ்வறிக்கைத் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பிரதி பொது முகாமையாளர் பதவிக்காக பதில் கடமையில் நியமித்தல்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் VII ஆவது அத்தியாயத்தின் 12.2.6 ஆம் பிரிவின் பிரகாரம், அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல், பிரதி பொது முகாமையாளர் (கால்நடை மற்றும் பெருந்தோட்ட அபிவிருத்தி) பதவி, பிரதி பொது முகாமையாளர் (கூட்டிணைந்த மற்றும் செயற்பாடுகள்) பதவி என்பவற்றுக்காக உதவி பொது முகாமையாளர் பதவிகளில் இருக்கின்ற இரண்டு உத்தியோகத்தர்களுக்கு 2017 ஒக்தோபர் 17 ஆந் திகதி பதில் கடமை நியமனம் வழங்கப்பட்டிருந்தன. எனினும், வேலை நீக்கத்திற்கு உட்பட்டிருந்த பிரதி பொதுமுகாமையாளர் (கூட்டிணைந்த மற்றும் செயற்பாடுகள்) 2017 திசெம்பர் மாதம் 12 ஆந் திகதி முதல் மீண்டும் சேவைக்கு அறிக்கையிட்டிருந்த போதிலும், அந்த பதவியின் பதிற் கடமை பதவி இரத்துச் செய்யப்படாமல் 2017 திசெம்பர் மாதம் 12 ஆந் திகதி முதல் 2018 ஆகஸ்ட் மாதம் 31 வரை ரூபா 36,000 தொகை பதிற்கடமை படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**(இ) தொடர்ச்சியாகக் காணப்பட்ட பதவி வெற்றிடங்களின் காரணமாக கணக்குப் பிரிவு செயலிழந்து காணப்பட்டமை**

கணக்குகள் பிரிவின் பிரதான நிறைவேற்று பதவிகள் மூன்றில் 04 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்த வேண்டிய போதிலும், 2016 ஆம் ஆண்டு முதல் முகாமையாளர் மற்றும் உதவி பொது முகாமையாளர் பதவிகள் இரண்டும் 11 மாதங்கள் முதல் உதவி பொது முகாமையாளர் (நிதி) பதவியும் வெற்றிடமாகக் காணப்பட்டமையால் 2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 செப்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி வரையும் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் நிதிக் கட்டுப்பாடுகள் நலிவாக இருந்தமையும் அதற்கான காரணமாக இருந்தது.

**(ஈ) உதவி பொது முகாமையாளர் (மனித வளம் மற்றும் நிர்வாகம்)**

2016 சனவரி முதல் வெற்றிடமாகக் காணப்படுகின்ற சபையின் உதவி பொது முகாமையாளர் (மனித வள மற்றும் நிர்வாக) பதவிக்காக ஆட்சேர்ப்பற்கு 2017 மார்ச் 04 ஆந் திகதி பகிரங்க செய்திப்பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் கிடைக்கப்பெற்ற 18 விண்ணப்பங்களுக்குரிய விண்ணப்பதாரர்களுக்காக 2017 மே 31 ஆந் திகதி நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டிருந்தது. எனினும், கணக்காய்வுத் திகதியான 2018 செப்தெம்பர் 04 ஆந் திகதி வரையும் அந்தப் பதவிக்கு ஆட்சேர்க்கப்படாதிருந்ததுடன் இந்தப் பதவி வெற்றிடமாகி 02 வருடமும் 08 மாதமும் கடந்திருந்தமை, சபையில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் காணப்பட்ட 105 பிரதான நிறைவேற்று பதவிகளில் 42 உம் வெற்றிடமாகக் காணப்பட்டமையும் காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) மேற்பார்வை மற்றும் செயற்பாடுகள் முகாமையாளர் என்ற பதவி 2015 திசெம்பர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்தும், மேற்பார்வை மற்றும் செயற்பாடுகள் உதவி முகாமையாளர் பதவி சபையின் ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்ட திகதியான 2011 ஆகஸ்ட் மாதம் 25 ஆந் திகதி முதல் 2018 ஆகஸ்ட் மாதம் 31 ஆந் திகதி வரை முறையே 02 வருடங்களும் 09 மாதங்களும் மற்றும் 07 வருடங்கள் முதல் வெற்றிடமாகக் காணப்பட்டன.

**(ஊ) ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் குறித்த வினைத் திறமைகாண் தடைப் பரீட்சைக்காக தோற்றாமல் பதவியுயர்வு வழங்கியமை.**

2011 ஆகஸ்ட் 24 ஆந் திகதி தேசிய கால் நடை வள அபிவிருத்திச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த ஊழியர் ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் முகாமைத்துவ மட்டத்தில் முதலாவது தரம் வரை சகல ஊழியர்களும் பதவியுயர்வு மற்றும் சம்பள அதிகரிப்பிற்காக வினைத்திறமை காண் தடைப் பரீட்சை சித்தியடைதல் கட்டாயமாகும். எனினும், ஊழியர் ஆட்சேர்ப்பு நடைமுறை தாபிக்கப்படும் வரையில் முகாமைத்துவ சேவையில் இருந்த 07 உத்தியோகத்தர்களுக்கு உதவி பொது முகாமையாளர் பதவி வரை மேற்கூறப்பட்ட வினைத்திறமைகாண் பரீட்சையில் சித்தியடையாமலேயே பதவியுயர்வுகள் வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது. மேலும், சிரேஷ்ட, மூன்றாம் நிலை மட்டத்தில் 11 பதவிகளில் 43 உத்தியோகத்தர்களுக்கும், இரண்டாம் நிலையில் 2 பதவிகளில் 12 உத்தியோகத்தர்களுக்கும் பட்டப்பின் கல்வித் தகைமைகள் மற்றும் தேவையான அனுபவம் என்பன இல்லாமல் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தது.

**(எ) ஆட்சேர்ப்பு நடைமுறையை மீறி ஆட்சேர்ப்பு இடம்பெற்றமை**

2012 சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2015 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையான தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம், சபைக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்த சிரேஷ்ட, மூன்றாம் மற்றும் இரண்டாம் நிலை உத்தியோகத்தர்கள் 43 பேர்களில் 19 உத்தியோகத்தர்களுக்கு அதாவது 44 சதவீதத்திற்கு தேவையான தொழில் தகைமைகள் அல்லது பிரயோகத் தகைமைகள் இன்றி ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தமை அவதானிக்கப்பட்டது. சிரேஷ்ட நிலையில் மூன்று உத்தியோகத்தர்களின் சேவை தொழில்சார் தகைமைகள் மற்றம் அனுபவத் தகைமைகள் இல்லாமையின் அடிப்படையில் முடிவுறுத்தப்பட்டிருந்ததுடன், 18 உத்தியோகத்தர்கள் 2017 ஒக்தோபர் 25 ஆந் திகதியளவில் கேட்டு விலகியிருந்ததுடன் அவர்களில் 07 உத்தியோகத்தர்களுக்கும் தொழில்சார் தகைமைகள் காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் ஆட்சேர்க்கப்பட்ட 22 உத்தியோகத்தர்கள் மாத்திரம் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் சேவையினை வழங்கியிருந்த போதிலும், அதிலும், 09 பேர்கள் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் காணப்பட வேண்டிய அனுபவ தகைமைகளின்றி சேர்க்கப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம் இந்த நிறுவனம் தொடர்ச்சியாக ஆட்சேர்ப்பு நடைமுறையை மீறி செயற்பட்டிருந்மை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.7 வாகனப் பயன்பாடு

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான 185 வாகனங்கள் காணப்பட்டதுடன் வாகனக் கட்டுப்பாடு மற்றும் பயன்படுத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கைளின் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 1642 இன் பிரகாரம் திடீர் விபத்து ஏற்பட்டவுடன் உடனடியாக அந்த விபத்து பொலிசிற்கு அறிக்கையிடப்பட வேண்டும். எனினும், பத்து வாகன விபத்துக்களில் ஐந்து விபத்துக்கள் பொலிசிற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 104(3) இன் பிரகாரம் விபத்து ஏற்பட்டு 07 தினங்களுக்குள் ஆரம்ப அறிக்கையொன்று அல்லது நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் இறுதி அறிக்கையொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், பத்து வாகன விபத்துக்களின் தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் அந்த அறிக்கை தயாரிக்கப்படாதிருந்ததுடன் ஏற்பட்ட நட்டத்தை இனங்கண்டு பொறுப்பு வாய்ந்த நபரிடமிருந்து அந்த நட்டத்தை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 மே 25 ஆந்திகதி 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணானதாக 1989 யூலை 13 ஆந் திகதி 28/89 ஆம் இலக்க கால்நடை வள சபையின் உள்ளக மூலம் சபையின் தலைவருக்காக எரிபொருள் வரையறை இல்லாதிருந்ததாகவும், உதவி முகாமையாளர் பதவியில் இருக்கின்ற உத்தியோகத்தர்களுக்கும் மேலுள்ள சகல முகாமையாளர்களுக்கும் தனிப்பட்ட முறையில் ஓடுவதற்காக மாத்திரம் வரையறுக்கப்பட்டு 960 கிலோ மீற்றருக்கு அண்மித்ததாக 137 லீற்றர் (1 லீற்றருக்கு 7 கிலோ மீற்றர்) ஆகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், அந்த முகாமையாளர்களுக்கடையே எச்எம்1-1 தொகுதிக்கு கீழுள்ள உத்திரோகததர்களும் உள்ளடக்கப்பட்ட போதிலும், இவ்வாறு பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை ஏற்பாடுகளை மீறி நடவடிக்கை எடுப்பதற்கு அத்திணைக்களத்திலிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2015 மே 25 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம் தலைவருக்காக கடமை மற்றும் தனிப்பட்ட பாவனைக்காக மாதாந்தம் வழங்கப்படுகின்ற எரிபொருள் எல்லை போதியளவில் இல்லாத விசேட சந்தர்ப்பங்களிலும் வரிசை அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் எரிபொருள் எல்லையின்றி பயன்படுத்தப்பட்டிருந்தது.

(உ) குழாம் வாகனமொன்றுக்காகக் காணப்படுகின்ற வண்டியொன்று 2018 யூலை 20 ஆந் திகதி சபையின் தலைவரால் எடுத்துச் செல்லப்பட்டிருந்ததுடன் 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதி வரை 2,483 கிலோ மீற்றர் ஓட்ட அட்டவணைகளில் உள்ளடக்கப்படாமல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. 2018 ஆகஸ்ட் 03 ஆந் திகதி முதல் அந்த வண்டி மீண்டும் அமைச்சு பதவியணியின் உத்தியோகத்தர் ஒருவருக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், இந்த வண்டி மகாவலி கால்நடை விற்பனைக் கம்பனிக்கு வழங்குவதற்கு சபையினால் அறிவிக்கப்பட்டபோதும், அதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 3.8 சந்தைப் பங்கு

சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினதும், மத்திய வங்கியின் ஆண்டறிக்கையினதும் பிரகாரம் மீளாய்வாண்டில் நாட்டின் ஒட்டுமொத்த பால் உற்பத்தியில் சபையின் பங்களிப்பு 3.8 சதவீதமாகவும், தேங்காய் உற்பத்தியில் 0.6 சதவீதமாகவும் மற்றும் கோழி உற்பத்தியில் 13.5 சதவீதமாகவும் ஆனமையால் பங்களிப்பு மிகவும் கீழ் மட்டத்தில் காணப்பட்டது.

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் விநியோகிக்கப்பட்ட கடிதம் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ‘‘ஆண்டு 2030 இன் நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமை காணப்பட்டதுடன், மீளாய்வாண்டிற்குரிய தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபையினால் தமது விடயப்பரப்பின் கீழ் கொண்டுவரப்படுகின்ற பணிகள் தொடர்பில் எவ்வாறு செயற்பட வேண்டியுள்ளது என்பது தொடர்பாக அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக சபையின் விடயப்பரப்பிற்குரிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்கினை அடைந்து கொள்ள வேண்டிய கட்டங்களும், இலக்கின் அடிப்படையில் அடைவுகளை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுமையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

2018 சனவரி 30 ஆந் திகதிய 493 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு முகாமையாளர், முகாமையாளர் நிதி பதவியின் வேலை மேவுகைக்காகவும் நியமிக்கப்பட்டமையால் உள்ளகக் கணக்காய்வு அறிக்கை விநியோகித்தலில் தாமதம் ஏற்பட்டமை, உள்ளகக் கணக்காய்வு திட்டத்தைத் தயாரித்து அமுல்படுத்துதல் போன்ற பணிகளை நிறைவேற்றுதல் செயலிழந்து காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 5.2 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

#### 5.2.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பெறுகைகள் திட்டம்**

(i) 2006 இன் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1(அ) இன் பிரகாரம் சபையினால் பிரதான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2006 இன் அரசாங்க பெறுகைகள் கைநூலின் 4.2.3 ஆம் பந்தியின் பிரகாரம், பெறுகைகள் கால அட்டவணையொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், சபையினால் மீளாய்வாண்டின் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கியுள்ள கொள்வனவுகளுக்காக குறித்த காலஎல்லையொன்று காண்பிக்கப்படாதிருந்ததுடன் சகல கொள்வனவுகளுக்காகவும், ஆரம்பத் திகதி 2017 சனவரி 01 மற்றும் இறுதித் திகதி 2017 திசெம்பர் 31 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3.1(அ) பந்தியின் பிரகாரம் மொத்தக் கிரய மதிப்பீடு தயாரித்தல், 4.3.2 ஆம் பந்தியின் பிரகாரம் அதனை அங்கீகரித்தல், 4.3.3 ஆம் பந்தியின் பிரகாரம் மொத்தக் கிரய மதிப்பீட்டை திருத்துதல் மற்றும் நாளதுவரையாக்குதல் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) 22 பண்ணைகளில் 157 விடயங்களைக் கொள்வனவு செய்வதற்காக பாதீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 360.34 மில்லியனாக இருந்த போதிலும், பிரதான அலுவலகத்தில் 04 பிரிவுகளில் 06 விடயங்களுக்காக ரூபா 5.18 மில்லியன் தொகையும் மற்றும் பாம்சொப் பிரிவிற்கு 14 விடயங்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 1.93 மில்லியன் தொகையும் ஒதுக்கப்பட்டிருந்த போதும், அவை பெறுகைகள் திட்டத்தில் காண்பிக்கப்படவில்லை. மேலும், மீளாய்வாண்டில் 08 பண்ணைகளில் 16 விடயங்கள் மற்றும் பிரதான அலுவலகத்தின் ஒரு பிரிவில் விடயமொன்று தொடர்பாக பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பெறுமதி ரூபா 41.03 மில்லியன் ஆகவும் பாதீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 45.95 மில்லியன் ஆகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2017 ஒக்தோபர் 01 ஆந் திகதி முதல் 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை பசு மாடுகளுக்காக ரூபா 508,793,160 பெறுமதியான உணவுகளைக் கொள்வனவு செய்யும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பந்தி இலக்கம் 2.14.1 மற்றும் 2017 மார்ச் 15 ஆந் திகதிய மேலதிகம் 33 இன் பிரகாரம் ரூபா 250

மில்லியனை விஞ்சிய கொள்வனவுகளுக்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைகள் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணானதாக சபையின் பெறுகைகள் குழுவின் மூலம் பெறுகைச் செயற்பாடுகள் இடம்பெற்றிருந்தது. 2017 ஒக்தோபர் 01 முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் அந்த கொள்வனவுகளுக்காக ரூபா 55,827,475 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், உணவுப் பொருட்களின் தரத்தன்மை கட்டுப்பாடு பரிசோதனையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டின் போது கூட்டுமொத்தமாக ரூபா 95,442,840 பெறுமதியுடைய நிலையான சொத்துக்களை நிர்மாணித்தல் மற்றும் ரூபா 70,955,950 பெறுமதியான 10 சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்குரிய கோவைகளைப் பரீட்சித்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2006 இன் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பந்தி இலக்கம் 4.3 இன் பிரகாரம் ரூபா 47,322,950 பெறுமதியான 09 ஒப்பந்தங்களுக்கான மொத்தக் கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பந்தி இலக்கம் 5.4.8 மற்றும் 8.9.3 இன் பிரகாரம் ரூபா 9,276,427 பெறுமதியான 05 ஒப்பந்தங்களுக்காக செயலாற்றல் பிணையொன்று, மீளக் கையளித்தல் கடிதம் மற்றும் எழுத்துமூல உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை.

(iii) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பந்தி இலக்கம் 5.6 இன் பிரகாரம் கேள்வி கோருவதற்கு முன்னர் மாதிரிகள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 439,975 தொகைளில் இரண்டு ஐஸ்கிறீம் இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்குரிய மாதிரி தயாரிக்கப்படாதிருந்ததுடன் ரூபா 1,733,602 தொகையில் 08 நடமாடும் மின்சார வேலிகளைக் கொள்வனவு செய்வதற்காகவும், ரூபா 5,366,123 தொகையில் இரண்டு குளிரூட்டி அறைகளை நிர்மாணிப்பதற்காகவும் ஆன மாதிரிகள் பூரணமின்றி தயாரிக்கப்பட்டிருந்தது. மேலும், மேலே காண்பிக்கப்பட்ட மின்சார வேலிகளைக் கொள்வனவு செய்வதற்குரிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் பந்தி இலக்கம் 7.11.1 இன் பிரகாரம் கேள்வி மதிப்பீட்டு அறிக்கையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பந்தி இலக்கம் 8.12.3 இன் பிரகாரம் நிலைய பொறுப்பு உத்தியோகத்தரால் பொருள் கிடைத்தமைக்கும் அவை குறித்துரைத்த மாதிரிகளுக்கு இணங்கியிருந்தமைக்கும் சான்றிதழொன்று விநியோகிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 3,037,850 தொகையில் கால்நடை உணவு கலவை செய்யும் இயந்திரத்தைக் கொள்வனவு செய்யும் போதும், ரூபா 1,733,602 தொகையில் (வரியுடன்) 08 நடமாடும் மின்சார வேலிகளைக் கொள்வனவு செய்யும் போதும், அவ்வாறு சான்றிதழொன்று விநியோகிக்கப்படாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) இரண்டு பண்ணைகளில் கோழி இறைச்சி தயாரிக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 5,366,123 தொகையில் இரண்டு குளிரூட்டி அறைகளை நிர்மாணிப்பதற்கும், ரூபா 16,591,487 தொகையில் இரண்டு பாரிய குளிரூட்டிகளைப் பொருத்துவதற்கான பெறுகைளின் கூட்டுப்பெறுமதியில் 20 சதவீதமான முற்பணமான ரூபா 4,391,522 தொகை 2017 மே 17 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. எனினும், உடன்படிக்கையில் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி காண்பிக்கப்படாதிருந்ததுடன் முற்பணத்தை வழங்கும் போது சமர்ப்பிக்கப்பட்ட முற்பணக் காப்புறுதி 2017 செப்தெம்பர் 30 ஆந் திகதி காலாவதியாகியிருந்த போதிலும், ஒரு பண்ணையில் இந்த நிர்மாணங்கள் அத்திகதியிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 5.2.2 தாமதமான செயற்திட்டம்

மீளாய்வாண்டின் போது ரூபா 10.98 மில்லியன் செலவில் மஹபேரியதென்ன பண்ணையில் கோழி இறைச்சி தயாரிப்பதற்காக தேவையான குளிரூட்டி அறை மற்றும் பாரயிளவிலான குளிரூட்டியுடன் தொடர்புடைய துணைப்பாகங்கள் என்பன வழங்கப்பட்டிருந்த போதிலும், பொருந்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக கோழி இறைச்சி தயாரிக்கும் செயற்திட்டம் 2018 செப்தெம்பர் 10 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.4 இன் பிரகாரம் நிதியாண்டு ஆரம்பமாவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் வரைவு பாதீடு அங்கீகாரத்திற்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 04 மாத தாமதத்தின் பின்னர் 2017 சனவரி 31 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சுற்றறிக்கையின் 5.2.5 ஆம் பந்தியின் படி, பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு உரிய ஆண்டு ஆரம்பமாவதற்கு 15 நாட்களுக்குக் குறையாத காலமொன்றில் உரிய நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆண்டின் பாதீடும் தாமதமாகவே சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் சுற்றறிக்கையின் 5.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் பாதீடு செய்யப்பட்ட ஐந்தொகையொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 5.4 தீர்வு காணப்படாத கணக்காய்வு பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1974 மற்றும் 1992 என்ற ஆண்டுகளிலிருந்து சபையினால் நடாத்திச் செல்லப்படுகின்ற 24 பண்ணைகளுக்குரிய காணிகளின் உரித்தை முறையான பிரகாரம் கையேற்காமல் அந்த காணிகளில் 2016 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 194,565,192 பெறுமதியான கட்டிடங்கள் மற்றும் ரூபா 701,358,733 பெறுமதியான உட்கட்டமைப்புக்கள் என்பன நிர்மாணிக்கப்பட்டிருந்தன. எனினும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்தக் காணிகளை கையேற்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் காணி மீள் நிர்ணய ஆணைக்குழுவின் மந்த நிலையின் காரணமாக வர்த்தமானியின் மூலம் உரித்தை வழங்குதல் தாமதமடைந்ததாக, பதிலில் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5(2) ஆம் பந்தியின் பிரகாரம் செயற்திட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(i) நிறுவனத்தின் பால் செயற்திட்டம், பேன்வைஸ் செயற்திட்டம், டிலய்ட் செயற்திட்டம் மற்றும் பாம்சொப் செயற்திட்டம் என்பவற்றினது பிரதான அலுவலகத்தினதும் செயற்பாடுகள்

(ii) வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய நிதிநிலைமைக் கூற்று

(iii) கடன் மீளச் செலுத்தும் திட்டம்

(iv) நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் நிறுவகக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போதுள்ள பதவியணியினர் தொடர்பான விபரம்

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. கீழே குறிப்பிடப்படப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கொள்வனவுக் கட்டுப்பாடு | பெறுகை வழிகாட்டிக் கோவை பின்பற்றப்படாமை |
| (ஆ) வாகனக் கட்டுப்பாடு | (i) சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்கானாமல் உத்தியோகத்தருக்கு வாகனங்கள் வழங்கியமை மற்றும் படிகள் செலுத்தியமை |
| | (ii) நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாமை. |
| | (iii) வாகன சம்பவத்திரட்டுப் புத்தகம், வாகனப் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை, வாகன விபத்து தொடர்பாக பதிவேடொன்று பேணப்படாமை |
| | (iv) வாகனங்கள் தொடர்பாக பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாமை |
| (இ) பதவியணியினர் நிர்வாகம் | ஆட்சேர்ப்பு நடைமுறை விதிகளுக்கு இணங்காமல் ஆட்சேர்ப்புக்கள் இடம் பெற்றமை மற்றும் வெற்றிடங்களாக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |